கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்
மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

அ.வ.எண். 231/2015

2021ம் ஆண்டு 27.10.2021 பிவா.சா.6

சாட்சியின் சாட்சியம் திரு. சி. குமார் சரவணன், எம்.எ., எம்.எல்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கணேசன் | தொழில் | |
| த/பெ | சங்கரகோனார் | கிராமம் | சுந்தரம் செட்டி தெரு |
| வயது | | தாலுகா | தாராபுரம் |
| ஜாதி | | மாவட்டம் | |
| சமயம் | | | |

குறுக்கு விசாரணை வாதி தரப்பில்

சத்தியமாக சொல்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்க்கவில்லை. அதை நான் படித்து காண்பிக்க சொல்லவில்லை. நான் சரோஜா அம்மாள் என்பவரிடம் இருந்து கிரைய வாங்கியதற்கான பத்திரம் பிவாசாஆ.15 ஆகும். நான் கிரையம் வாங்குவதற்கு வில்லங்கசான்று வாங்கி பார்த்தேன். நான் வாங்கிய வில்லங்கசான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. சரோஜா அம்மாள் 1வது பிரதிவாதி சுப்பராயன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்பதற்கான ஆவணம் பிவாசாஆ.14 ஆகும். அந்த கிரைய பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை. கிரையம் வாங்குவதற்கு முன்பு சொத்து சம்பந்தமாக சட்டக்கருத்து யாரிடமும் வாங்கவில்லை. பிவாசாஆ.14 ல் 2 வது பக்கத்தில் எனக்கு மட்டும் பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டு எனது சொந்த சுவாதீனத்தில் இருந்து வரும் சொத்து என கண்டுள்ளது. பிவாசாஆ.15 கிரையம் வாங்குவதற்கு முன்னால் 10 வருடங்களாக 1ம் பிரதிவாதி சுப்பராயன் இடத்தில் நான் குடியிருந்து வந்தேன். 1ம் பிரதிவாதி குடும்பத்தை பற்றி எனக்கு தெரியும் நல்ல பழக்கம் தான். 1ம் பிரதிவாதியின் தந்தை சடகோபால் நாயுடுவை தெரியும். நான் அங்கு குடியிருக்கும்போது அவர் உயிருடன் இருந்தார். சடகோபால் நாயுடுவிற்கு 1ம் பிரதிவாதி மற்றும் 2 பெண்மக்கள் இருக்கிறார்கள். சடகோபால் நாயுடுவின் ஒரு மகள் கலாவதி

அவர் 3ம் பிரதிவாதி. அவர் தற்போது நான் வாங்கியுள்ள வீட்டிற்கு எதிரே உள்ளார். மற்றொரு மகள் எங்கிருக்கிறார் என்பது எனக்கு தெரியாது அவரை எனக்கு தெரியாது. சுசீலா என்ற மகள் சடகோபால் நாயுடுவிற்கு இருக்கிறார் என்று கேள்விபட்டுள்ளேன். சுசீலாவின் கணவர் ரயில்வேயில் வேலை செய்து வெளியூரில் இருந்ததால் நான் அவரை பார்க்கவில்லை. சொத்துக்கள் சடகோபால் நாயுடு வாரிசுதாரர்கள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்று தெரிந்தே நான் கிரையம் வாங்கினேன் என்றால் கிரையம் வாங்கிய பின்னர் தெரிந்துக் கொண்டேன். சடகோபால் நாயுடு வாரிசு சான்றிதழ் கேட்க வில்லை. பிவாசாஆ.14 கிரைய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. அதனால் பிவாசாஆ.15 கிரைய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரையம் பிவாசாஆ.15 வாதியை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அதனால் வாதி பாகப்பிரிவினை கோரியுள்ளதை நான் எந்த விதத்திலும் தடுக்கமுடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ.14 முதல் பிவாசாஆ.17 வரையிலான ஆவணங்கள் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை 3, 4, 5 ம் பிரதிவாதிகள் தரப்பில்

வாதி தரப்பின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

C KUMAR SARAVANAN

Digitally signed by C KUMAR SARAVANAN
Date: 2021.10.27 20:31:54 +0530

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி

தாராபுரம்

<u>கூடுதல் மாவட்ட மற்றும்  அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>
<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம்,   தாராபுரம்</u>

<u>அ.வ.எண்.</u>  231/2015

2021ம் ஆண்டு 27.10.2021 பிவா.சா.7

சாட்சியின் சாட்சியம் திரு. சி. குமார் சரவணன், எம்.எ., எம்.எல்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

பெயர் சந்தானலெட்சுமி தொழில்

த/பெ நாராயணன் கிராமம்

வயது தாலுகா

ஜாதி மாவட்டம்

சமயம்

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்தவழக்கில் 15ம் பிரதிவாதி ஆவேன். வாதி என் பெயரிலும் பிரதிவாதிகள் பெயரிலும் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனத்திற்கும் பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார். நான் எனது பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதையே சாட்சியமாக எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். அத்துடன் 07.12.1988ம் தேதியிட்ட எனது பெயரில் என் கணவர் எழுதிக்கொடுத்த கிரையம் சார்பதிவாளர் அலுவலக சான்றளிக்கப்பட்ட நகல் பிவாசாஆ.18. குடிநீர் வரி மற்றும் சொத்துவரி செலுத்திய ரசீதுகள் எண்ணிக்கை 5 பிவாசாஆ.19. 05.08.2015 தேதியிட்ட மின்கட்டணம் செலுத்திய ரசீது பிவாசாஆ.20.

குறுக்கு விசாரணை வாதிதரப்பில்

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்தேன். முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் தயார் செய்தார். பிவாசாஆ.18ன் அசல் ஆவணம் வங்கியில் உள்ளது. சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்று வாங்கி பார்த்தேன். பாகப்பத்திரத்தையும் பார்த்து தான் வாங்கினேன். சடகோபால் நாயுடு என்பவர் 1ம் பிரதிவாதியின் அப்பா என்று தெரியும். 1ம் பிரதிவாதி சடகோபால் நாயுடுவின் ஒரே மகன். சடகோபால் நாயுடுவிற்கு

எத்தனை குழந்தைகள் என்பது தெரியுமா என்றால் ஒரு மகள் இருப்பது தெரியும் மற்றொரு மகள் இருப்பது தெரியாது. 3ம் பிரதிவாதி கலாவதி என்பவர் சடகோபால் நாயுடுவின் மகள் ஆவார். சடகோபால் நாயுடுவின் மற்றொரு மகளை நான் பார்த்தது இல்லை. 1ம் பிரதிவாதி கிரையம் கொடுக்கும்போது பிவாசாஆ.18ன் படி சொத்து பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டு அவரது அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்ததாக தான் காட்டப்பட்டுள்ளது. சடகோபாபல் நாயுடுவிற்கு ஒரு மகன் இரண்டு மகள்கள் இருப்பது தெரிந்து தான் கிரையம் வாங்கினேன் என்றால் தெரியாது. கிரையம் வாங்குவதற்கு முன்பு சொத்து சம்பந்தமாக சட்டக்கருத்து யாரிடமும் வாங்கவில்லை. சடகோபால் நாயுடு வாரிசு சான்றிதழ் கேட்க வில்லை. வரி ரசீதுகள் 2014–2015க்குண்டானது என்றால் சரிதான். மேற்படி ரசீதுகள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ.18 முதல் 20 வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது வயது 68 ஆகும். 1988ம் வருடம் இடம் வாங்கி 1993ல் வீடு கட்டி அதிலிருந்து வரி கட்டி வந்துள்ளேன். நான் கிரையம் வாங்கும்போது சடகோபால் நாயுடு இல்லை. அவரது குடும்பத்தை பற்றி தெரியாது. தாவா சொத்தில் வாதிக்கு பாகப்பிரிவினை கோரி உரிமை உள்ளது என்றும் அதை நான் தடுக்கமுடியாது என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை 3 , 4, 5 பிரதிவாதிகள் தரப்பில்

வாதி தரப்பின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

C KUMAR SARAVANAN

Digitally signed by C KUMAR SARAVANAN
Date: 2021.10.27 20:32:17 +0530

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி

தாராபுரம்